தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 17, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 30, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்."

ஆட்சியாளர் தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பேணிப் பாதுகாப்பார். அவரை நீதி நெறி தவறாத அவரது நல்லாட்சியானது காப்பாற்றும்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ்.வி. இராமசாமி அவர்கள் 26-4-2013 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எஸ்.வி. இராமசாமி அவர்கள் 1977 முதல் 1980 வரை பெரம்பலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 351, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

351—

துணை மின் நிலையம்

***5684—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிக்கு 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொன்னையூரில் 110/11 கிலோ வோல்ட்-10 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றியுடன் அமைந்துள்ள துணை மின் நிலையத்திலிருந்து தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கொன்னையூர் பகுதியின் மின் பளு 6 எம்.வி.ஏ. ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதியின் மின் பளு 3 எம்.வி.ஏ. ஆகும். ஆக மொத்தம் இந்தத் துணை மின் நிலையத்திலிருந்து 9 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் பளுதான் இங்கே தேவையுள்ளதால்,